# முகவரியில்லா கடிதங்கள்

## கவிதைத் தொகுப்பு



ஆர்.எம்.மனாஸ்

# முகவரியில்லாத கடிதங்கள்

(கவிதைத் தொகுப்பு)

ஆர்.எம்.மனாஸ்

# முகவரியில்லாத கடிதங்கள்


| | |
|---|---|
| நூலாசிரியர் | : ஆர். எம். மனாஸ் |
| | 0751176613 |
| | manasmass98@gmail.com |
| முதற்பதிப்பு | : 2024 |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கே |
| கணினி வடிவமைப்பு | : அ.சதகதுல்லாஹ் |
| அச்சுப்பதிப்பு | : சசி பிரின்ட்டிங், பொரோணுவ, கஹவத்தை. |
| | 071 6178 985 / 075 2267 888 |
| | Sashistudio01@gmail.com |
| ISBN இலக்கம்(E- Copy) | : 978-624-93739-1-4 |



All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the author.

**தங்கமீன்கள்**

சுவரிலே மாட்டியிருக்கும்
கடல் போட்டோவைப் பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கின்றன
மீன்தொட்டியிலே சிறைப்பட்டிருக்கும் தங்கமீன்கள்.

*26.01.2024*
காலை *10.50*

**ஏதோவொன்று**

எல்லாமே எடுத்து வைத்துவிட்டேன்
ஆனாலும்,
எதையோ ஒன்றை விட்டுச்செல்வது போலவே உணர்கிறேன்
எல்லாமே இருக்கிறது
இருந்தாலும்
ஏதோவொன்று தொலைந்தது போலவே இருக்கிறது.

*26.01.2024*
இரவு *10.15*

## தொலைத்த இரவுகள்

இரவுகளை பகிர்ந்து கொண்டவர்கள்
இன்று உறக்கத்தில் கிடக்கிறார்கள்
இரவுகளை பங்கிட்டவர்கள்
உறக்கத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

*27.01.2024*
இரவு*11.50*

**அம்மாவின் கூவல்**

நேரத்திற்கு கிடைக்கும்
விடுதி சாப்பாட்டில் தெரிகிறது
சாப்பாட்டை போட்டுவைத்துவிட்டு கூவிக்கொண்டிருக்கும்
அம்மாவின் முகம்.

*28.01.2024*
காலை *8.30*

**சமத்துவம்**

அரசியல் தலைவர் பேச
ஆரம்பித்தார்....
மக்களே! நான் ஆட்சிக்கு வந்தால் இனவாதத்தை ஒழிப்பேன்
மதவாதத்தை தவிர்ப்பேன்
சமத்துவத்தை சமூகமயப்படுத்துவேன்
வேறுபாட்டை ஒழிப்பேன்
ஏனென்றால்,
நான் உங்கள் இனம்
நான் உங்கள் மதம்
நான் உங்கள் சமுதாயம்.
அர்த்தம் புரியாத ஏழைச்சிறுமி
பல்லைக் காட்டிக்கொண்டே
காற்றிலே பறந்துகொண்டிருக்கும்
கட்சிக்கொடியை பார்த்துக் கொண்டிருந்தாள்.

*28.01.2024*
*மாலை 04.10*

**எப்படிச் சொல்லுவது?**

*உண்மையிலே என்னைப் பற்றி கேட்கவில்லையா?*
*என் பெயரையாவது உச்சரிக்கவில்லையா?*
*என் நினைப்பே அவர்களுக்கு இல்லையா?*
*என்று நீ  கேட்கிறபோது*
*உன் குரல்கள் உடைந்து*
*கண்ணீர் நிரம்புவதை பார்த்தேன்*
*இனி எப்படி நான் சொல்வது!*
*உன்னை யாரும் கேட்கவில்லையென்று.*

*30.01.2024*
*மாலை  4.50*

**புதுமைகள் தேடி**

நீலமற்ற வானம்
அலையற்ற கடல்
கரைதொடா அலைகள்
பூப்படையாத சப்தங்கள்
வெள்ளை இரவுகள்
உறங்கா விழிகள்
மௌனத்தின் ஓசைகள்
இப்போதெல்லாம் இவைகள் எனக்கு பிரம்மிப்பைத் தருவதேயில்லை
இவைகள் அத்தனையையும் பார்த்து சலித்துப்போய்விட்டது
புதிதாக ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

*31.01.2024*
இரவு *10.15*

## **மகள்மார்களின் திருமண உரிமைகள்**

திருமணவயது வரை
எல்லா உரிமைகளையும் கொடுக்கும் அப்பாக்களுக்கு
கடைசிவரை தெரிவதேயில்லை
மகள்மார்களின் திருமண உரிமைகளை.

*01.02.2024*
காலை *9.50*

**கூண்டுக்கிளி**

"பேசுகின்ற இந்த கிளிக்கு இல்லாத சொகுசு வேறு யாருக்குமில்லை
அப்படியொரு சொகுசுவாழ்க்கை இந்த கிளிக்கு"
என்றான் கிளியை வளர்ப்பவன்.
கூட்டுக்குள் இருந்த கிளியிடம் உண்மையை கேட்டேன்
கிளி பேசவேயில்லை.

*01.02.2024*
*மாலை 5.45*

**சிக்கிக்கொண்டமை**

பல்லியிடமிருந்து பூச்சியை காப்பாற்றிவிட்ட திருப்தியில்
உறங்கச் சென்றுவிட்டேன்
இப்போது சிலந்தியிடம் சிக்கிக்கொண்டது
அந்தப்பூச்சி.

*02.02.2024*
காலை *9.15*

## இடம் கொடுக்கும் கரைகள்

கரைகள் இடம்கொடுக்கும் வரை
அலைகள் மோதிக்கொண்டேதான் இருக்கும்
கரைகளுடன்.

*02.02.2024*
காலை *10.10*

**சிரிக்கும் கரை**

அலைகள் எவ்வளவு அடித்தாலும்
வலிகளை தனக்குள் மறைத்துக் கொண்டு
நுரைகளால் சிரித்துக் கொண்டிருக்கிறது கரை.

*02.02.2024*
மாலை *5.40*

**உதிர்ந்த இலைகள்**

இலைகள் உதிர்கிறதென்று
மரங்கள் கவலைப்படுவதில்லை
இலைகள் சருகாகி உரமாகி
மீண்டும் இலைகளாக துளிர்க்குமென்ற நம்பிக்கையை
மரத்துக்குச் சொல்லிக்கொடுக்கிறது
உதிர்ந்த இலைகள்.

*03.02.2024*
காலை *5.50*

**இலவசக் கல்வி**

இலவசக் கல்விச்சேவையென்ற போர்வைக்குள்
வியாபாரக் கூடங்களாகின்றன வகுப்பறைகள்
வகுப்புக் கட்டணம் கட்ட வசதியில்லாமல்
தற்கொலை செய்துகொண்டாள்
வைத்தியராக கனவு கண்ட ஆயிஷா.

*04.02.2024*
இரவு *10.15*

**காற்றை பாடும் மரம்**

காற்றால் முறிக்கப்பட்டது கிளை
காற்றை தூற்றிக் கொண்டிருந்தது மரம்
வீடற்ற ஒருவனுக்கு முறிக்கப்பட்ட கிளை
கூடாரமானது.
இப்போது காற்றை தினந்தோறும்
பாடத் தொடங்கியது மரம்.

*05.02.2024*
காலை *9.50*

**கொல்லப்படும் டாவின்சிகள்**

சுவரிலே கிறுக்கிக்கொண்டிருந்த
குழந்தையின் கைகளிலே அடித்து
கிறுக்குவதை தடுத்தாள் தாய்.
ஐயோ!
ஒரு டாவின்சியை கொன்றுவிட்டாளே.

*06.02.2024*
காலை *10.10*

**புயல்காற்றாய்**

உன் காலடியிலிருந்து ஒருதுளி மண்ணெடுத்து
நமக்கென்று ஓர் உலகம் செய்து வைத்திருந்தேன்
அதில் வீட்டைக் கட்டிக்கொண்டிருக்கையிலே கடந்து சென்றுவிட்டாய்
புயல் காற்றாய் நீ.

*07.02.2024*
*மாலை 5.50*

## நிலத்தின் நம்பிக்கை

நிலத்தைப் பிரிந்து மேகத்தை நோக்கி
நீர் ஆவியாகிச் செல்வதால்
நிலம் ஒருபோதும் பிரிவுத்துயரை அடைவதில்லை
கருமேகமாகி மழைத்துளிகளாக
மீண்டும் நிலத்தையே முத்தமிட்டு
வளமடையச் செய்யுமென்ற நம்பிக்கையுண்டு
நிலத்துக்கு.

*08.02.2024*
பகல் *1.48*

## பிடிக்க முடியாமல்போன மின்மினிப்பூச்சிகள்

மங்கி மங்கி ஒளிர்ந்துகொண்டிருந்த மின்குமிழில்
காதல் கவிதைகள் படித்துக் கொண்டிருந்தேன்
மின்குமிழ் நினைவுபடுத்திச் செல்கிறது
பிடிக்க முடியாமல் போன மின்மினிப்பூச்சிகளை.

*10. 02. 2024*
இரவு *11. 50*

## அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா

அநியாயக்காரர்கள் ஆட்சிக்கே வாக்களிக்கிறீர்களே ஏன்? என்று கேட்டேன்.
அதற்கவர்கள் சொன்னார்கள்
‘‘அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா’’
அநியாயங்கள் செய்த முன்னால் ஆட்சியாளனோ
சட்டத்துறையிலே நெஞ்சை நிமிர்த்தி சொல்கிறான்
‘‘ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும்
ராஜ பறவைகள் ராஜ பறவைகள்தான்’’.
உடனே நான் அந்த மக்கள் சொன்னதை நினைத்துக்கொண்டேன்
‘‘அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா’’

*11.02.2024*
பகல் *2.10*

**கானலில் மீன்கள்**

குளக்கரையிலே அமர்ந்துகொண்டு
தூண்டிலைப் போட்டு காத்துக்கொண்டிருந்தேன்
குளத்தை விட்டுவிட்டு கானல் நீரிலே துள்ளிக்குதிக்கின்றன
மீன்கள்.

*11.02.2024*
இரவு *9.30*

**இப்போதைய திருமணங்கள்**

எதை எதையெல்லாம் பார்க்கக் கூடாதோ
அதை அதையெல்லாம் பார்த்து நடக்கிறது
இப்போதைய திருமணங்கள்.

*11.02.2024*
இரவு *10.45*

**அம்மா பசிக்குது**

“அம்மா பசிக்குது” என்றான் தெருவோரம் கிடந்த அந்தச் சிறுவன்.
“கொஞ்சம் பொறுத்துக்கடா கண்ணு” என்று கொண்டே
கிழிந்த சேலைத்துண்டால் தன் கண்ணீரைத் துடைத்தாள் தாய்
“எனக்கு பசியில்லையம்மா!” என்று சொல்லி
தாய் முகத்தை பார்த்து புன்னகைத்தான்
அந்த தெருவோரச் சிறுவன்.
வேகமாக போன கார்
அவர்களின் உடலில் அள்ளி இறைத்தது
பாதையில் தேங்கியிருந்த சாக்கடை நீரை.

*12.02.2024*
காலை *9.30*

**பச்சோந்திகள்**

நேற்று“நண்பன்”
இன்று “பகைவன்”
கடந்த மாதம் “காதலி”
இந்த மாதம் “ யாரோ ஒருவன் மனைவி”
போன வருடம் “ விசுவாசி”
இந்த வருடம் “ துரோகி”
இத்தனையையும் எண்ணிக்கொண்டே
அமர்ந்திருந்தேன் மரத்தடியில்.
தாழ்ந்த கிளையொன்றில் தலையை ஆட்டிக்கொண்டே
நிறங்களை மாற்றிக்கொண்டிருந்தது
பச்சோந்தி.

*14.02.2024*
பகல் *2.35*

**அட்சதைக்கு உதவாத மலர்கள்**

*எல்லாவிதமான மலர்களும்*
*அட்சதைக்கு பயன்படுவதில்லை*
*ஆனாலும்,*
*எல்லா மலர்களும் பூத்துக்கொண்டுதானே இருக்கின்றன!*
*அட்சதைக்கு மட்டும்தான் மலர்கள் மலர வேண்டுமா என்ன?*
*அட்சதைக்கு பயன்படும் மலர்கள்*
*செடியிலிருக்கும் மலர்களைப் போல*
*வண்டுகளை காதலிக்க முடியுமா என்ன!*

*14.02.2024*
*மாலை 5.45*

## தீட்டு

‘நீ உள்ளே போகக் கூடாது’

‘ஏன்?’

‘போனால் தீட்டு’

அறையை எட்டிப்பார்த்தாள் அவள்

சுவரிலே கரப்பான் பூச்சிகள் புணர்ந்துகொண்டிருந்தன.

*18.02.2024*

மாலை *5.49*

**ஜன்னலோரம்**

பத்து வயதில் அம்மாவுடன் பேரூந்தில் போகையிலே
ஜன்னலினூடாக இயற்கை காட்சிகள் இன்பத்தை தந்தன
இருபத்தைந்து வயதிலே
தனியாகப் பேரூந்தில் போய்க் கொண்டிருக்கின்றேன்
ஜன்னலினூடாக தெரிவதெல்லாம்
வலிகளும் மீளமுடியா நினைவுகளும்.

*19.02.2024*
காலை *10.05*

**அளவீடுகள்**

ஒரு துண்டு வானத்தை வைத்து
ஒட்டுமொத்த வானத்தையும் அளவிடுகிறார்கள்
ஒரேயொரு நறுமணமில்லா பூவை நுகர்ந்து
ஒட்டுமொத்த பூக்களின் மணத்தையும் தீர்மானித்துவிடுகிறார்கள்
இப்படித்தான் சில மனிதர்களின் அளவீடுகளும் புரிந்துணர்வுகளும்.

*19.02.2024*
*இரவு 8.54*

**நீ இருந்தால்தான்**

என் சந்தோஷம் தொலையக்கூடாது என்பதற்காக நீ விலகிச்சென்றாய்
நீ விலகிச் செல்வதால்தான் என் சந்தோஷம் கிடைக்குமென்றாய்
கடைசிவரை நீ புரிந்துகொள்ளவேயில்லை
இரவிருந்தால்தான் நட்சத்திரம் பிரகாசிக்குமென்பதை.

*19.02.2024*
இரவு *11.15*

## கொஞ்சம்

கொஞ்சம் காலம் தாழ்த்தியே சொல்லியிருக்கலாம்
இல்லையேல் சொல்லாமலேயே இருந்திருக்கலாம்
கொஞ்சம் பொறுமையாகவாவது சொல்லியிருக்கலாம்
கொஞ்சம் மெதுவாகவாவது சொல்லியிருக்கலாம்
சொல்லியதாலோ இவ்வளவு இடைவெளி.

*20.02.2024*
காலை *10.45*

**அவசர முகங்கள்**

ஆற்றங்கரையோர நடை
தென்றலின் இனிமை
கடலின் இரைச்சல்
நகரும் மேகங்கள்
பாட்டியின் கதைகள்
இவையெல்லாம் துறந்து ஓடிக்கொண்டிருக்கிறன
இன்றைய தொழிநுட்ப யுகத்தில்
அவசர முகங்கள்.

*20.02.2024*
*மாலை 4.56*

**அம்மாவின் ஆடை**

மனைவிக்கு என்ன ஆடை வேண்டுமெனக் கேட்டேன்
‘பட்டுப்புடவை’ என்றாள்
மகளுக்கு என்ன ஆடை வேண்டுமெனக் என்று கேட்டேன்
‘நீயூ மோடர்ன் சல்வார்’ என்றாள்
மகனுக்கு என்ன வேண்டுமெனக் கேட்டேன்
‘மாஸ்டர் விஜய் ஷேர்ட்’ என்றான்
அம்மாவுக்கு என்ன வேண்டுமெனக் கேட்டேன்
‘எனக்கு எதுக்குப்பா? உனக்கு ஏதாவது வாங்கிக்கோ மகனே’ என்றாள்.

*20.02.2024*
இரவு *7.55*

**கடிகார முட்கள்**

கடிகாரம் மனித உணர்வுகளை அறிந்துகொண்டு
அதற்கேற்பவே சுழல்கிறதோ என்னவோ!
இன்பமாக இருக்கும் போது வேகமாக சுழல்கின்றன முட்கள்
துன்பத்திலும் காத்திருப்பிலும் உறைந்திருக்கும் போது
மெதுவாகவே தவழ்கின்றன கடிகார முட்கள்.

*22.02.2024*
காலை *8.10*

**ஏங்கும் நிலம்**

வறட்சியின் வலியால்
வெடித்துக் கொண்டிருந்த நிலம்
கடந்து போகின்ற மேகங்களை
ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.

*23.02.2024*
காலை *10.10*

**என்னமோ மாதிரி இருக்கிறது**

கவலையாக இருக்கிறது
என்னமோ மாதிரி இருக்கிறது
"ஏன்?"
"தெரியவில்லை"
ஆனால் என்னமோ மாதிரி இருக்கிறது.

*23.02.2024*
இரவு *11.55*

**மாயமாகும் மழை**

மழைச்சத்தம் கேட்டு வாசலுக்கு ஓடிவந்தேன்
மழைத்துளிகள் வீழ்வதை இரசிக்க ஆரம்பிக்கும் முன்னரே
மாயமாகிவிட்டது மழை.

*24.02.2024*
காலை *1.45*

## வாட்ஸாப் ஸ்டேட்டஸ்

‘ஐ லவ் யூ அம்மா’ என்று வாட்ஸாப் ஸ்டேட்டஸ் வைத்தான் மகன்.
பக்கத்து வீட்டுக்காரியிடம் அவன் அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள்
‘என் மகன் என்னோடு பேசி இந்த மாதத்தோடு
இரண்டு வருடங்களாகின்றதென்று…’

*24.02.2024*
காலை *10.24*

**கிரிக்கெட்**

தென்னை மட்டையில் செய்த ‘பெட்’
றப்பர் பாலில் செய்யப்பட்ட வெண்ணிற ‘பந்து’
ஓலைகள் கழிக்கப்பட்ட தென்னைமட்டை ‘ஸ்டம்ப்’
வீட்டுத்தகரத்தில் பட்டால் ‘அவுட்’
மதிலுக்கு அப்பால் போனால் ‘அவுட்’
முட்புதருக்குள் போனால் ‘அவுட்’
கீழைத்தெரு பள்ளர்சேரி பசங்களும்
மேலைத்தெரு இரண்டுமாடி வீட்டு பசங்களும்
ஒன்றாகக் கலந்த இரண்டு ‘டீம்’.
அஹ்மது ஜோசப் ராமர் எல்லாம் ஒரு ‘டீம்’.
உச்சிவெயில் மண்டையை உறுத்தும்
“இந்த வெயிலுலயும் சொரணையே இல்லாம விளையாடுதுங்க” என்ற
அம்மாக்களின் ஆதங்க வார்த்தைகள்.
வியர்வை தோலில் உறைந்து உப்புத்துகள்கள் போல படிந்திருக்கும்

விளையாட்டு! விளையாட்டு!
அப்பாக்களை கண்டால் ஓட்டமெடுக்கும் சில தோஸ்துகள்
அம்மாக்கள் மெல்லியகம்புகளை எடுத்துக்கொண்டு
அடித்து வீட்டிற்கு இழுத்துச் செல்லும்வரை விளையாட்டு

இவைகளையெல்லாம் எண்ணிப்பார்க்கக் கூட வாய்ப்பில்லை
‘ஸ்னெக்’ சாப்பிட்டுக் கொண்டே
டீவியில் ‘ஐ. பீ. எல்’பார்த்துக்கொண்டிருக்கும்
பட்டணத்து சிறார்கள்.

*25.02.2024*
இரவு *8.50*

**கவனிக்காவிட்டாலும்**

ஒரு ஜன்னலினூடாகவே
இவ்வளவு மனிதர்களை
என்னால் கவனிக்க முடிகிறது.
கதவுகளை திறந்து வைத்திருக்கின்ற மனிதர்கள்
என்னை கவனிக்காவிட்டாலும்.

*26.02.2024*
நண்பகல் *12.00*

**சமநிலை**

மின்கம்பிகளிலே அமர்ந்து கொண்டிருந்த
குருவிகள் கற்றுக்கொடுக்கின்றன
வாழ்க்கையின் சமநிலையை.

*26.02.2024*
*மாலை 5.15*

**அலங்கரிக்கும் காயங்கள்**

உறங்காத விழிகளுடன் காயங்களால் உடைந்துபோய்
கண்ணீர் நிறைந்த கண்களுடன் முற்றத்தில் அமர்ந்துகொண்டு
இரவு வானத்தை பார்த்துக் கொண்டிருந்தேன்
புன்னகைத்துக் கொண்டிருந்த நட்சத்திரங்கள்
என்னைப்பார்த்து இப்படிச் சொன்னது!
‘‘இரவின் உடலில் காயங்கள் நாங்கள்
வானத்தை எப்படி அலங்கரித்திருக்கிறோம் பார்த்தாயா
காயங்கள்தான் அலங்கரிக்கும்’’

*26.02.2024*

*இரவு 8.50*

**பூக்களும் வண்டுகளும்**

*மனிதர்களே வாருங்கள்!*
*பூக்களிடமிருந்து கற்றுக்கொள்வோம்*
*வண்டுகளிடமிருந்து கற்றுக்கொள்வோம்*
*தீண்டாமைகளை தீண்டாமலிருக்க கற்றுக்கொள்வோம்*
*பூக்களுக்கும் வண்டுகளுக்குமிடையே தீண்டாமைகள் இருப்பதில்லை*
*எத்தனையோ வண்டுகளுடன் கூடிக்களித்த பூக்களைத்தானே*
*அட்சதையாக பூஜை அறைகளில் இறைவனுக்கு தூவுகிறோம்*
*பூக்களும் வண்டுகளும் தீண்டாமை பார்த்திருந்தால்*
*பூக்கள் பூத்திருக்குமா?*
*பிறகு ஏன் மனிதர்களில் மட்டும் தீண்டாமைகள்?*

*27.02.2024*
*காலை 9.15*

**பாம்பாட்டியும் பாம்பும்**

ஒவ்வொரு தடவையுமே தேர்தல் பிரச்சாரத்திற்கு
வரும் அரசியல்வாதிகளையும்
அவர்களின் சொல்லுக்கு ஏமாந்துபோகும் மக்களையும் பார்க்கின்றபோது
ஒருகாட்சிதான் ஞாபகத்திற்கு வருகிறது
மகுடி ஊதுபவனையும் பல்பிடுங்கப்பட்ட பாம்பின் ஆட்டத்தையும்.

*27.02.2024*

காலை *10.11*

**யார் இல்லாவிட்டாலும்**

யார் நின்றாலும்
தன் அச்சில் பூமி சுழன்று கொண்டுதானே இருக்கிறது
யார் பிரிந்தாலும்
மேகங்கள் நகர்ந்துகொண்டுதானே இருக்கின்றன.

*27.02.2024*
பகல் *2.10*

## இனி எப்படி தொடர்வது!

காலையிலே எழுந்தவுடன்  தொலைபேசியில் மறைத்துவைத்திருந்த
புகைப்படத்தில் உன் திருமுகம் பார்ப்பதிலிருந்து தொடர்கிறது
என் விடியல்

இருளை விலக்க ஜன்னலுக்குள் எட்டிப்பார்க்கும் ஒளிக்கிரணங்கள்
அனுமதியேயில்லாமல் சிந்தனையில் நிறையும் உன் நினைவுகள் போல
என் கருவிழிகளுக்குள் தவழ்வதிலிருந்து தொடர்கிறது என் விழிப்பு

நதி நீரில் முங்கிக் குளிக்கையிலே
உன் முதல் ஸ்பரிசத்தின் இன்பம் போல
அங்கமெல்லாம் வழிந்தோடும் குளிர்ச்சியோடு தொடர்கிறது
என் குளிப்பு

ரசம் போன கண்ணாடியில் முகம் பார்க்கையில்
ஒட்டிவைத்த பொட்டுக்களில் உன் வதனம் தெரிவதிலிருந்து
தொடர்கின்றன  என் அலங்காரங்கள்

அலுவலகத்திற்கு செல்கையில் சிக்னலில் நிற்கும் போது
காரிலிருந்த குழந்தையின் மழலைச் சிரிப்பொலியில் கேட்கும்
உன் சிரிப்பிலிருந்து தொடர்கிறது
என் புன்சிரிப்பு

இடைவேளையில் வாட்ஸாப்பில் வரும்
உன் குரல்பதிவிலிருந்து தொடர்கின்றன
என் நாளின் அர்த்தங்கள்

வேலைமுடிந்து இரவில் ஆள் அரவமேயில்லாத வழியில் செல்கையில்
உடலைத் தீண்டும் தென்றலிலிருந்து தொடர்கின்றன
உன்னுடன் வாழும் என் எதிர்காலக் கனவுகள்

இருள் நிறைந்த அறையிலே நீ அனுப்பும் குறுஞ்செய்திகளுக்கு
மறுபதில் அனுப்புவதிலிருந்து தொடர்கிறது என் இரவு

வாட்ஸாப்பில் நீ கொடுக்கும் இமோஜி முத்தங்களுடன்
தொடர்கிறது என் உறக்கம்

நீயிருக்கும் வரை தொடர்ந்தன
இத்தனை தொடர்ச்சிகளும்.....
இனியெப்படி சொல்லிப் புரியவைப்பது இத்தனை தொடர்ச்சிகளிடமும்
நீயில்லையென்பதை.

*01.03.2024*
இரவு *11.58*

**கடந்து போகும் மேகங்கள்**

கடந்துபோகின்ற மேகங்களுக்கு தெரிவதேயில்லை
உலகத்தில் எங்கோ ஓர் மூலையில் சிறைப்பட்டு
சிறுதுளைக்குள் வானத்தைப் பார்க்கும் கைதியின் வலிகள்.

*02.03.2024*
*மாலை 5.50*

## மகளின் சித்திரம்

காணும் இடமெங்கும் கட்டிடங்களே தெரியும்
அப்பார்ட்மண்டின் பெல்கனியில் இருந்துகொண்டு
சித்திரம் வரைந்து கொண்டிருந்தாள் மகள்
அவள் வரைந்துமுடித்த அப்பார்ட்மெண்ட் சித்திரத்தில்
காணுமிடமெல்லாம் செழித்து
கிளைகள் பரப்பியிருந்தன மரங்கள்.

*03.03.2024*
காலை *9.50*

**பூக்களின் வாசம்**

ஆலயத்தின் வெளியிலே ரோஜாப்பூ மாலைகளை
விற்றுக்கொண்டிருந்தாள் ஓர் பூக்காரி.
அவளிடம் கேட்டேன்
ஒவ்வொரு பூவையும் பறிக்கும் போது அதன் நறுமணம் எப்படியிருக்கும்?
விரல்களுக்கிடையிலே மலர்களையெடுத்து கோர்க்கின்ற போது
அந்த இன்ப உணர்வு எப்படியிருக்கும்?
அதற்கு பூக்காரி சொன்னாள்
‘‘பட்டினி வயிற்றில் வலித்துக் கொண்டிருக்கையிலே
பூக்களின் வாசம் நாசிக்கு தெரிவதில்லை’’

*04.03.2024*
காலை *9.15*

**மறத்தல்**

மறக்கத்தான் நினைக்கிறேன்
மறக்கும்போதெல்லாம் நினைக்கிறேன்
நினைக்க மறந்துவிட்டேன்
மறந்துவிட்டேன்.

*02.03.2024*
இரவு *10.45*

**புறத்திணை**

புறத்திணை மண்டபத்தில் பஞ்சபாண்டவர்களின் துயர்தீர்க்க
பிரதிநிதியாகச் சென்ற கிருஷ்ணன்
கௌரவர்கள் கொடுத்த உயர்பதவிகளில் மூழ்கிவிட்டான்
இப்போது கிருஷ்ணனும் கௌரவர்களும்
சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள்
பஞ்சபாண்டவர்களை நிரந்தரமாக அக்ஞாதவாசம் அனுப்பிவிட.

*04.03.2024*
நண்பகல் *12.00*

## உனக்கு வந்தால் இரத்தம்

இணையத்திலே ஆபாசம் பார்த்துவிட்டு
தெருவிலே நடந்து வந்துகொண்டிருந்தான் ஓர் இளைஞன்
கல்லூரி முடிந்து வீட்டிற்கு போய்க்கொண்டிருக்கும் யுவதி
அவன் எதிரே வந்த கொண்டிருந்தாள்
வேண்டுமென்றே அவளை இடித்துவிட்டு
தெரியாமல் பட்டுவிட்டது என்றான் அந்த இளைஞன்
மறுநாள் மாலை!
தையல் வகுப்பு முடிந்து வந்துகொண்டிருந்த தங்கையிடம்
எவனோ ஏதோ சொல்லிவிட்டானென்று
அவனை தெருவிலே போட்டு உதைத்துக் கொண்டிருந்தான்
அந்த இளைஞன்.

*04.03.2024*
*மாலை 5.45*

**வரையறைகள்**

முன்பெல்லாம் வரையறையே இல்லாமல்
வார்த்தைகளை பேசிக் கொண்டிருந்தாய்
நேரம் போவதுகூட தெரியாமல் உரையாடிக் கொண்டிருந்தாய்
இப்போது?
வரையறையான வார்த்தைகள்
அளவான உரையாடல்கள்.

*04.03.2024*
இரவு *11.56*

**சிறகுகள்**

இதற்குமேல் முடியாதென்று வாழ்வே வெறுத்துப்போய்
ஆகாயத்தைப் பார்த்து அமர்ந்து கொண்டிருந்தேன்
பறந்து சென்ற பறவையின் இறகு காற்றிலே மிதந்து வந்து
என் முகத்தில் விழுகிறது.

*05.03.2024*
பகல் *1.45*

**எப்படிச் சொல்லுவது**

மொட்டை மாடிக்கு தினந்தோறும் என்னைத் தேடிவரும்
சிட்டுக்குருவிகளுக்கு எப்படிச் சொல்லிப் புரியவைப்பது!
நாளை ஊரைவிட்டு போகப்போகும் கதையை...!

*05.03.2024*
*மாலை 5.50*

**வெய்யெனப் பெய்யும் மழை**

*இறைவா!*
ஒரேயொரு பூவையாவது கொடு
பூந்தோட்டமே மலர்ந்திருந்திருந்தது
ஒரேயொரு துளியையாவது கொடு
வெய்யெனப் பெய்தது
மழை.

*06.03.2024*
*இரவு 9.00*

**உடைந்த வீட்டின் ஏக்கம்**

அந்த ஊரில்
ஆலயங்களை அடுக்குமாடிகளாகக் கட்டிக் கொண்டிருந்தார்கள்
அதை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது
பட்டினியால் வாடும் ஏழையின் உடைந்த வீடு.

*07.03.2024*
காலை *8.50*

**பழையன கழிதல்**

என் மகள் என்னிடம் கேட்டாள்
“எதுக்குப்பா இந்த மனிதர்கள் அடிக்கடி மாறிவிடுகிறார்கள்?”
அதற்கு நான் சொன்னேன்
“பழையன கழிதலும் புதியன புகுதலும்
மனிதர்களின் இயற்கை மரபு கண்ணே!”.

*07.03.2024*
காலை *10.15*

**ஒப்படைப்பு**

நீர் வற்றிப் போய்க்கொண்டிருந்த குளத்திலே
துடித்துக்கொண்டிருந்த மீன்
மேகத்தைப் பார்த்துக் கொண்டே தன் மரணத்தை
குளத்திடம் ஒப்படைக்கிறது.

*07.03.2024*
மாலை *4.56*

## பிரியாணி ஸ்பெஷல்

“எங்கள் வீட்டில் பிரியாணி ஸ்பெஷல்” என்று
வாட்ஸாப்பில் ஸ்டேட்டஸ் வைத்தான் ஒருவன்
பட்டினியோடு வாடிக்கொண்டிருந்தவன் ஏக்கத்தோடு பார்க்கிறான்
அவன் ஸ்டேட்டஸ்ஸை.

*03.07.2024*
இரவு *8.50*

## ஒரு வண்ணத்துப்பூச்சி

நிழலில்லா மரத்தடியில் அமர்ந்து கொண்டிருந்தேன்
வர்ணம் போன என் வாழ்க்கையின் வலிகளை மீட்டிவிட்டு
சிறகடித்து பறந்து செல்கிறது
ஒரு வண்ணத்துப்பூச்சி.

*08.03.2024*
பகல் *1.45*

## எல்லாமே பூக்கள்தான்

எல்லாமே பூக்கள்தான்
ரோஜாப்பூக்கள்
மல்லிகைப்பூக்கள்
அரலிப்பூக்கள்
அலரிப்பூக்கள்
வேப்பம்பூக்கள்
உதிர்ந்த பூக்கள்
காகிதப் பூக்கள்
எல்லாமே பூக்கள்தான்.

*08.03.2024*
*மாலை 5.10*

**பிறகெதற்கு தேக்கம்!**

எல்லாமே இழந்த பிறகும்
ஒரு நதி ஓடிக்கொண்டுதானே இருக்கிறது
நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டுதானே இருக்கின்றன
பூ மலர்ந்துகொண்டுதானே இருக்கிறது
காற்று வீசிக்கொண்டுதானே இருக்கிறது
எல்லாமே இழந்த பிறகும்
எல்லாமே நிகழ்ந்துகொண்டுதானே இருக்கிறது
பிறகெதற்கு தேக்கம்?

*12.03.2024*
காலை *10.10*

## அன்பின் தகைமை

‘‘பிடித்திருக்கிறது’’ என்றாள்
எதற்காக என்று கேட்டேன்
‘‘தெரியவில்லை ஆனால் பிடித்திருக்கிறது’’ என்றாள்
திடீரென ஒருநாள்!
‘‘பிடிக்கவில்லை’’ என்றாள்
ஏனென்று கேட்டேன்
‘‘பொருளாதாரமின்றி வீட்டில் காதலுக்கு அனுமதியில்லை’’ என்றாள்
வாட்ஸாப்பில் அவள் அனுப்பிய
திருமண அழைப்பிதழைப் பார்த்துக்கொண்டே
கண்ணீருடன் புன்னகைக்கிறேன்
அன்புக்கு தகைமை பொருளாதாரமா!.

*12.03.2024*
பகல் *1.10*

**இறுதிப்பக்கத்தில்**

காலம் முழுதும் காத்திருப்பேன்
கனவுகள் கைசேரும் வரை பூத்திருப்பேன்
கைகோர்க்கும் நாளுக்காக தவமிருப்பேன்
என்றெல்லாம் எழுதியிருந்தாள் இரண்டாம் அத்தியாயத்தில்.
"காலமெல்லாம் காத்திருக்க முடியுமா?" என்றிருந்தது
அவள் கொடுத்த சென்ற டயரியின் இறுதி பக்கத்தில்.

*12.03.2024*
*மாலை 6.15*

**வருவதும் போவதும்**

வரமென்று வருகிறார்கள்
சாபமென்று விலகிச் செல்கிறார்கள்
எல்லாமே பாடங்கள்தான்
எல்லோருமே பாடங்கள்தான்.

*12.03.2024*
இரவு *7.10*

**என் வீட்டு ஜன்னலில்**

*என் வீட்டு ஜன்னலிலே*
*சிலவேளைகளில் நிலவு முகங்காட்டுகிறது*
*சிலவேளைகளில் நட்சத்திரங்கள் பேசுகின்றன*
*சிலவேளைகளில் நட்சத்திரமும் நிலவும் உறவாடுகின்றன.*
*பலநேரங்களில் அவைகள்*
*முகத்தை திருப்பிக்கொண்டும்*
*கண்டும் பேசாமலும்*
*நேரமிருந்தும் உறவாடாமலும் போகின்றன.*

*13.03.2024*
*இரவு 11.55*

**கட்டிடத்தின் பின்னால்**

நீண்ட பிரிவுக்கு பின்
நான் அதே பொதுவெளியில் நின்றுகொண்டுதான் பேசுகிறேன்
நீதான் ஒரு கட்டிடத்தை கட்டிக்கொண்டு
அதன் பின்னால் நின்று மறைந்து பேசுகிறாய்.

*14.03.2024*
காலை *10.50*

**உன்னிடம் கொடுக்கும் முன்பே**

உனக்காக எழுதிய கடிதங்களை
உன்னிடம் கொடுக்கும் முன்பே
நீ உதிர்ந்து போனாய்!.
என் கடிதங்கள் அடிக்கடி கேட்கின்றன
நான் போகவேண்டிய முகவரி எதுவென்று.

*14.03.2024*
*மாலை 5.02*

**மனிதநேயத்தின் பெயர் அசிங்கம்**

ஒதுங்க இடமில்லாமல் மழையில் திரிந்து கொண்டிருந்தது
ஒரு சொறிநாய்.
ஜன்னலினூடாக மழையை இரசித்துக்கொண்டிருந்த என்னை
ஏக்கப்பார்வையுடன் பார்த்தது
மெதுவாக தூக்கி ஒதுங்க ஒரு இடம் கொடுத்தேன்
பார்த்தவர்கள் அசிங்கமானவன் என்றார்கள்
இப்போதெல்லாம் மனிதநேயத்திற்கு
அசிங்கம் என்றும் பெயர் வைத்து விட்டார்களோ?
சிரித்துக்கொண்டேன்.

*15.03.2024*
மாலை *5.50*

**காய்ந்த ரோஜாவின் இதழ்கள்**

சோலையையும் பெண்ணொருத்தியையும் நினைவுபடுத்திச் செல்கிறது
பதின்மூன்றாம் வகுப்பு தமிழ்ப்புத்தகத்தின் நடுவிலே கிடந்த
காய்ந்த ரோஜாவின் இதழ்கள்.

*16.03.2024*
காலை *10.16*

## இருந்தபோதும் பிரிந்தபோதும்

அவள் இருந்த போது
கரையின் மீது அலைகளுக்கு இருந்த காதல் புரிந்தது
அவள் பிரிந்த போது
கரையை அலைகள் எவ்வளவு புணர்ந்தபோதும்
இடைவெளிதான் தெரிகிறது.

*16.03.2024*
*மாலை 4.50*

**மின்மினிகள்**

பல்கலைக்கழகத்தில் அரிய வகை உயிரினமென்று
மின்மினிப்பூச்சிகளையும் அடையாளப்படுத்திய போது
நினைவுக்கு வந்தது
ஆறு வயதில் நானும் தம்பியும்
மின்மினிகளின் வெளிச்சத்தில் பாடப்புத்தகம் படித்த நாட்கள்.

*17.03.2024*

காலை *10.15*

**ஆலய வாசலில்**

குழந்தைப்பேறு வேண்டுமென சிறுதொட்டிலொன்றை
மரத்தில் கட்டிக்கொண்டிருந்தார்கள் தம்பதிகள்
ஆலய வாசலில் இருந்து சிரித்துக்கொண்டிருந்தது
அநாதைக் குழந்தை.

*18.03.2024*
காலை *11.15*

**வழமையான நாட்கள்தான்**

கிழிந்த சட்டையை தைத்து அணிபவர்களுக்கு
ஒருவேளை அடுப்பெரியும் வீடுகளுக்கு
உறவுகளை பிரிந்த உள்ளங்களுக்கு
பண்டிகை நாட்களெல்லாம் வழமையான நாட்கள்தான்.

*19.03.2024*
காலை *8.50*

**சிவப்பு நிறம்**

துணிக்கடையில் வேலை செய்து கொண்டிருந்தேன்
சிவப்பு நிறமென்றாலே எனக்கு வெறுப்பு என்றாள் ஓர் பெண்
நான் உடனே நினைத்துக் கொண்டேன்
ஓர் பலஸ்தீன் பெண்ணை.

*20.03.2024*
காலை *10.15*

**இனி எந்த ஒளிக்காகவும்**

இருளிலே நடந்து கொண்டிருந்தது வாழ்க்கை
விதிவசத்தால் ஓர் ஒளி வந்து வாழ்ந்து இன்பம் தந்து
மறைந்து போனது
அதுவரை காணாத இருளை இப்போதுதான் காண்கிறேன்
இருளிடம் சொன்னேன்
"இனி எந்த ஒளிக்காகவும் என்னை விட்டுச்செல்லாதே".

*20.03.2024*
மாலை *5.14*

**இன்னுமே அப்பா**

அப்பாவின் சட்டையை அணிந்து கொள்ளும் போதும்
அப்பாவை போலவே இருக்கிறாயென்று
கடந்து போகின்றவர்கள் சொல்லும் போதும்
அப்பா இன்னுமே இறக்கவில்லையென்றே தோன்றுகிறது.

*20.03.2024*
*மாலை 6.18*

**கோட் பாதர்**

ஐந்து வயதில் அப்பா‘ஹீரோ’
பதினைந்து வயதில் அப்பா ‘சூப்பர் ஹீரோ’
பதினெட்டு வயதில் அப்பா ‘மகா வில்லன்’’
என் பிள்ளைக்கு ஐந்து வயதான போது என் அப்பா ‘நல்ல அப்பா’
எனக்கு ஐம்பது வயதான போது
அப்பா‘கோட் பாதர்’.

*21.03.2024*
இரவு *9.15*

**காதல்! காதல்!**

பேரூந்தில் ஏறி அமர்ந்து கொண்டேன்
முன் இருக்கையில் இரண்டு காதல் ஜோடிகள் பேசிக்கொண்டார்கள்
“என்னை விட்டு போக மாட்டாயே?”- அவன்
“உலகமே எதிர்த்தாலும் உன்னை விட்டு போக மாட்டேன்”- அவள்
நான் நினைத்துக்கொண்டேன்
அவளும் இப்படித்தானே சொன்னாள்
பக்கத்தில் வந்த கண்டக்டர்
“டேய் பைத்தியம் எறங்குடா பஸ்ஸ விட்டு” என்ற போது
நினைவுகள் சிதைந்து இறங்கி நடந்தேன்.

*22.03.2024*
பகல் *10.15*

**நினைவுபடுத்தும் பட்டாம்பூச்சிகள்**

பத்துவருடத்திற்கு பின்
வீட்டுச்சுவரிலே ஒட்டிக்கொண்டிருந்த
பச்சைநிற பட்டாம்பூச்சி நினைவுபடுத்துகிறது
பள்ளிச்சுவர்களில் வர்ண வர்ண பட்டாம்பூச்சிகளை பிடித்து
சட்டைப்பைக்குள் பத்திரப்படுத்திய நாட்களை.

*23.03.2024*
இரவு *10.15*

**கண்ணம்மா**

பிரம்மன் உன்னைப்படைத்துவிட்டு
தன் கண்ணே பட்டுவிடும்போல இருக்கிறதென்று
உன் இதழின் விளிம்பிலே ஒட்டியதுவோ கண்ணம்மா?
இதழில் ஒட்டிக்கொண்டிருக்கும் அந்தச் சிறுமச்சம்!

*09.03.2024*
காலை *10.15*

**அதற்கென்று?**

என்றுமே வானில் ஜொலிக்கும் நிலவு
என்றாவது ஒருநாள் வராமலிருக்குமென்று தெரியுமெனக்கு
இரவுகளை அலங்கரிக்கும் நட்சத்திரங்கள்
விடிந்ததும் மறைந்துவிடுமென்பதும் தெரியுமெனக்கு
புல்லை புணர்ந்துகொண்டிருக்கும் பனித்துளிகள்
சூரியனைக் கண்டவுடன் ஆவியாகிவிடுமென்பதும் தெரியுமெனக்கு
இத்தனையும் தெரியுமெனக்கு
இத்தனையையும் சொல்லிக்கொடுத்தது இயற்கைதானெனக்கு
பிரிவுகள் இயற்கையானதுதான்
அதற்கென்று பௌர்ணமியை நான் இரசிக்காமல் இருக்கமுடியுமா?
இல்லையேல் இரவைத்தான் விரட்டிவிட முடியுமா?
இல்லையேல் சூரியனைத்தான் அணைக்க முடியுமா?
பிரிவுகள் இயற்கையானதுதான்
அதற்கென்று எப்போதோ வரப்போகும் வறட்சியை நினைத்து
இப்போது மரநிழல்களை விட்டு ஒதுங்கியிருப்பதா!.

*09.03.2024*
காலை *11.50*

**இந்த நிமிடங்கள்**

*சிரிப்பு வந்தால் சிரித்துவிடுகிறேன்*
*அழுகை வந்தால் அழுதுவிடுகிறேன்*
*சுனாமியை நினைத்து*
*கடலலைகளில் கால்நனைக்காமல் இருந்ததில்லை*
*மழையே பெய்யாமல் போனால் என்னவாகுமென்று நினைத்து*
*வானவில்லை இரசிக்காமல் முகம் திருப்பியதில்லை.*

*09.03.2024*
*பகல் 2.50*

**நினைவுபடுத்தும் சந்திப்புக்கள்**

எப்போதெல்லாம் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு
போக முடியாதென்று ஏங்குகின்றேனோ
அப்போதெல்லாம் அந்த ஏக்கத்தை நிறைவுறுத்திவிடுகின்றது
பல்கலைக்கழக நண்பனின் எதிர்பாராத சந்திப்பு.

*09.03.2024*
*மாலை 4.15*

**நான் விழுங்கியது**

விழுங்கவே கூடாதென
பிடிவாதமாய்த்தான் இருந்தேன்
ஏதோ ஓர் ஈர்ப்பில் விழுங்கிவிட்டேன்
இப்போது!
விழுங்கவும் முடியாமல்
துப்பவும் முடியாமல்
கடிக்கவும் முடியாமல்
மெல்லவும் முடியாமல்
அங்குமிங்குமாய் ஓடிக்கொண்டிருக்கிறது
நான் விழுங்கியது.

*09.03.2024*
இரவு *10.15*

**கண்ணீர்த்துளிகள்**

நிதந்தோறும் காற்றால் அலைக்கழிக்கப்படும் முற்றத்து மரம்
ஓர் அடைமழைக்கு பின் காற்று அதன் கிளைகளை
எவ்வளவு அலைக்கழிக்க முயற்சித்தும்
அசையாமலே நின்றுகொண்டிருந்தது.
காற்றுடன் எதற்காக உனக்கு இவ்வளவு கர்வமென்று
மரத்தை வேகமாக ஆட்டினேன்
எண்ணிக்கணக்கிட முடியாத அளவு சொட்டத் தொடங்கின
கண்ணீர்த்துளிகள்.

*10.03.2024*
பகல் *11.16*

**ஒன்றைக்கூட**

இலட்சங்கள் கொடுத்து தோட்டங்கள் வாங்கிவிடலாம்
பல்லாயிரங்கள் கொடுத்து பூச்செடிகள் நட்டுவிடலாம்
ஆனால்
உங்களால் ஒரு பூவைக்கூட மலரச்செய்ய முடியாது
ஒரு துளித் தேனைக்கூட சுரக்கச் செய்ய முடியாது
கூவிக்கூவி விளம்பரம் செய்தாலும்
ஒரு தேனியைக் கூட வரவழைக்க முடியாது.

*10.03.2024*
*மாலை 5.50*

**எறிந்த கல்**

கோழிக்குஞ்சுகளை காப்பாற்ற வேண்டுமென
கிளையிலிருந்த பருந்துக்கு கல்லெறிந்தேன்
பறந்து போய்விட்டது பருந்து
கல்பட்ட கிளை துடித்துக்கொண்டிருந்தது
வலியால்.

*10.03.2024*
காலை *10.15*

**பூக்களும் மனிதர்களும்**

பூக்கள் வேறு
மனிதர்கள் வேறு
பூக்கள் எந்த நேரத்திலும்
பூக்கள் எந்த இடத்திற்கேற்பவும்
தன் மணம்
தன் நிறம்
தன் வடிவம்
தன் குணம்
தன் சிரிப்பு
தன் விசுவாசம்
தன் காதல்
இவற்றையெல்லாம் மாற்றிக்கொள்வதில்லை
பூக்கள் வேறு
மனிதர்கள் வேறு.

*11.03.2024*
காலை *9.50*

**பத்திரப்படுத்திக் கொண்ட காகிதம்**

காகிதத்திலே சுற்றிக்கொடுக்கப்பட்ட பெட்டீஸை சாப்பிட்டுக்கொண்டே
ஒரு ப்ளேன்டி சொன்னேன்
பெட்டீஸை சாப்பிட்டுவிட்டு
அந்தக் காகிதத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன்
“நான் மூன்றாம் வகுப்பு
என் தந்தை கூலித்தொழிலாளி
என் இலட்சியம் வைத்தியராவது”
என்ற வாசகங்கள் எண்ணெயில் நெளிந்துகொண்டிருந்தன
வைத்தியருக்கு படித்துக்கொண்டிருக்கும் என் மகள்
சிந்தனையில் நிறைந்தாள்
அந்தத் தாளை மடித்து பத்திரப்படுத்திக் கொண்டேன்
அருகிலிருந்த குப்பைக்கூடை என்னைப் பார்த்து நன்றியுடன் புன்னகைத்தது.

*11.03.2024*
மாலை *4.45*

**காதல் நதி**

காதலென்ற தூயநதியில்
துள்ளிக்குதித்து விளையாடிக்கொண்டிருந்தன
காதல் மீன்கள்.
இனம் மதம் சாதி பொருளாதாரமென்ற
எல்லா நஞ்சையும் சேர்த்து நதியில் கலந்துவிட்டார்கள்
நஞ்சாகிய நதி நீரில் செத்து மிதந்துகொண்டிருந்தன
சமத்துவமாய் துள்ளிக்குதித்துக் கொண்டிருந்த
காதல் மீன்கள்.

*11.03.2024*
இரவு *10.55*

**வாசிக்கும் இரவுகள்**

உன்னுடனிருந்த ஒவ்வொரு நினைவுகளையும்
நாள் தேதி குறித்து ஆவணப்படுத்தி வைத்திருக்கின்றன இரவுகள்
எப்போதெல்லாம் என் அறையில் தனிமையாகிப் போகிறேனோ
அப்போதெல்லாம் உன் ஆவணப்பதிவுகளை
வாசிக்கத் தொடங்கிவிடுகின்றன இரவுகள்.

*11.03.2024*
இரவு *11.50*

**யார் அநாதை ?**

*நீயே ஓர் அநாதை!*
உன்னைப் பற்றி கவலைப்படவெல்லாம்
யாருமில்லையென்று திட்டினார்கள்
மறுகணமே....
எங்கிருந்தோ பறந்து வந்த சிட்டுக்குருவியொன்று
தோளிலே அமர்ந்துகொண்டது
உதிர்ந்த இலையொன்றால்
காற்று என் கன்னத்தை முத்தமிட்டுச் சென்றது
பழக்கமேயில்லாத நாய்க்குட்டியொன்று
என் காலைச் சுற்றி வட்டமடிக்கத் தொடங்கியது.

*03.15.2024*
காலை *11.40*

**உந்தன் அழைப்பு**

எத்தனைபேர் என் பெயரை உச்சரித்தாலும்
நீ உச்சரிப்பது போல வரவில்லை
மழைநேரத்தில் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்துகொண்டு
பிடித்த இடத்திற்கு பிரயாணம் செய்துகொண்டிருக்கும்போது
எதிர்பாரா நேரத்தில் பிடித்த பாடலொன்று
சட்டென்று காதுகளுக்குள் விழுகிற போது
பாட்டிலே கரைந்துபோகும் இன்பசுகத்தைப் போலவிருக்கிறது
நீ என் பெயரை அழைப்பதும் உச்சரிப்பதும்.

*16.03.2024*
காலை *10.50*

**எவ்வளவுதான் இருந்தாலும்**

எவ்வளவுதான் இருந்தாலும்
ஏதோ ஒன்றைத்தானே பிடிக்கிறது
எத்தனை அலைகளை கடல் அள்ளியெறிந்தாலும்
பிடித்த இடத்தில்தானே கால் நனைக்க முடிகிறது.

*18.03.2024*
*மாலை 5.15*

## இன்னுமே நாம் சந்திக்கவில்லை

பள்ளிக்கூடத்தை கடந்துவரும் போது …!
மீண்டும் நாம் சந்திப்போமென்று சொல்லிக்கொண்டே
நாமிருவரும் நட்ட மாமரம் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறது
நம் பருவத்து நினைவுகளை.
இன்றோடு அந்த மரத்திற்கு நாற்பது வயதிருக்கும்
இன்னுமே நாம் சந்திக்கவில்லை.

*22.03.2024*
*மாலை 4.50*

**தந்தையர்களின் துப்பாக்கித் தோட்டாக்கள்**

பஞ்சு மெத்தையில் படுத்துறங்கும்
இஸ்ரேலிய இராணுவ வீரர்களின் பிள்ளைகளுக்குத் தெரிவதேயில்லை
தன் தந்தையர்களின் துப்பாக்கித் தோட்டாக்கள்
பலஸ்தீன் பிள்ளைகளின் இதயங்களை துளைக்கும்
சோகக் கதைகளை.

*27.03.2024*
இரவு *10.54*

**வீழ்த்தும் தென்றல்**

மரங்களின் முகங்களிலே
முத்தங்களைக் கொடுத்துச் செல்லும் தென்றலேதான்
புயலாகிற போது
மரங்களின் கன்னத்திலேஅறைந்து வீழ்த்தியும் விடுகிறது.

*28.03.2024*
பகல் *2.40*

## சில சந்திப்புக்கள்

கோடை வெப்பத்தில்
கருகும் நிலையில் வாடிக்கிடந்தது இலை.
எதிர்பாரா நேரத்தில்
திடீரென ஓர் அடைமழையின் சந்திப்பு!
காய்ந்துபோன இலையில்
இப்போது நீர்த்தாரை.
இப்படித்தான் வாழ்க்கையிலும் சில சந்திப்புகள்....

*30.03.2024*
இரவு *11.59*

அன்பின் உறவுகளே!
"முகவரியில்லாத கடிதங்கள்" என்று இந்தக் கவிதைத்தொகுப்பை நான் முகவரிப்படுத்தக் காரணமே, கடிதம் என்பது எம் உள்ளத்து உணர்ச்சி வெளிப்பாடுகளை யாருக்கு சொல்ல வேண்டுமோ அவர்களிடம் சொல்லவேண்டியதை வெள்ளைத் தாளில் எழுதி உரிய முகவரியிடம் ஒப்படைத்துவிடுவது. அப்படித்தான் இந்தக் கவிதைகளும். வெவ்வேறு நிலைகளில் தனிப்பட்ட ரீதியில் உள்ளத்தில் எழும் ஆர்ப்பரிப்புகள், உணர்வின் பிழிவுகள், சக மனிதனின் வாழ்வில் நடைபெறும் அவலங்கள், அவற்றால் எனக்குள் ஏற்படும் தாக்கங்கள், தேவையே இல்லாமல் சமுதாயத்தில் கீறி வைத்திருக்கும் வரையறைக் கோடுகள், பொருத்தமேயில்லாத மரபுகள் என்கின்ற பெயரிலாலான அடக்குமுறைகள், பழக்கவழக்கங்கள் என்கின்ற பெயரிலும், சம்பிரதாயங்கள் என்கின்ற பெயரிலும் தொடரும் பிரம்மைகள், போலிகளின் நிஜங்கள் போன்ற பலதளங்களில் தாக்கப்படுகின்ற போது சமுதாயத்தை விழிப்புணர்வு வழியில் நடாத்த வாசகனின் சிந்தனைகளை செம்மைப்படுத்தி அவர்கள் ஊடாக மாற்றத்தை ஏற்படுத்தி சமுதாயத்தை நேர்வழியில் கொண்டு செல்ல நினைத்ததன் மறுவிழைவே இந்த முகவரியில்லாத கடிதங்கள். இந்தக் கடிதங்களின் முகவரிகள் எனக்குத் தெரியாது. அது யாராகவும் இருக்கலாம். இதிலிருக்கும் ஒவ்வொரு கடிதங்களுக்குமான ( கவிதைகள்) முகவரிகளாக நீங்களும் இருக்கலாம். அல்லது உங்களுக்குத் தெரிந்த உங்கள் நண்பர்களாகவோ, குடும்ப உறுப்பினராகவோ, சமுதாயத்திலிருப்பவர்களாகவோ, அரசியல் களமாகவோ , உலகக் களமாகவோ இருக்கலாம். உங்களுக்கு முகவரி தெரிந்தால் அந்த முகவரிகளிடம் சேர்த்துவிடுங்கள். நீங்களே முகவரிகள் என்றால் படித்துத் தெளிவுபெறுங்கள். என் பல படைப்புக்களை pdf வடிவத்தின் ஊடாகவே இவ்வளவு காலம் வெளியீடு செய்தேன். ஆனால் இன்று வன்பிரதியாக வெளியிட வாய்ப்பு கிடைத்தமைக்கு இறைவனுக்கும், என் வாசக உள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதிலுள்ள ஒவ்வொரு கவிதைகளும் புதுக்கவிதை வடிவத்தில் இருக்கும். புதுக்கவிதையென்பது தமிழ் இலக்கியத்திற்கு கிடைத்த பெருவரம். அது நறுக்கு நெறித்தாற் போன்ற வசனங்களின் ஊடாக சிந்தனையில் கனல் தூவச்செய்யும்.

இன்று இந்த முகவரியில்லாத கடிதங்களை உங்களிடம் முகவரிப்படுத்தியுள்ளேன். பொருத்தமான முகவரிகளுக்குக் கொண்டு போய்ச்சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையிலும் எழுதியவன் என்ற வகையிலும், ஒரு தபாற்காரனைப் போலவும் உங்களிடமே ஒப்படைத்துவிடுகிறேன்.

"ஒரு எழுத்தாளனுக்கு எதுவும் முற்றுப்புள்ளியல்ல. கமாதான்"

என்றும் யதார்த்த கனவுகளுடன்,
ஆர்.எம்.மனாஸ்

